செ.வெ.எண் : நாள் : 22.09.16

**விருதுநகர் மாவட்டம்**

**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் 18 வயது பூர்த்தி அடைந்த கல்லூரி மாணவ மாணவியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் உள்ள அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் 18 வயது பூர்த்தி அடைந்த கல்லூரி மாணவ மாணவியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

கல்லூரிகளில் பயிலும் 18 வயது பூர்த்தியடைந்த மாணவ, மாணவிகள் அனைவரும் வாக்குரிமையின் முக்கியதுவத்தை உணர்ந்து இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காதவர்கள் **01.09.2016 முதல் 30.09.2016க்குள்** சம்பந்தப்பட்ட வாக்கு சாவடியின் நிர்ணயிக்கப்பட்ட அலுவலரிடமோ அல்லது வாக்கு சாவடி நிலை அலுவலரிடமோ அல்லது சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்/ நகராட்சி ஆணையரிடமோ அல்லது வருவாய் கோட்டாட்சியரிடமோ விண்ணப்பங்களை வழங்கி கண்டிப்பாக தங்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை சேர்க்க வேண்டும்.

சம்மந்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்கள் 24.09.2016 அன்று நடைபெறும் அந்தந்த ஊராட்சிகளில் நடைபெறும் சிறப்பு கிராம சபை கூட்டங்களில் வாசிக்கப்படும். அதில் தங்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

இது தவிர **25.09.2016 (ஞாயிறு)** அன்று அந்தந்த வாக்குசாவடி மையங்களில் **சிறப்பு முகாம்கள்** நடத்தப்பட்டு மனுக்கள் பெறப்படும். மேலும் 1.1.2017 அன்று 18 வயது பூர்த்தி அடைபவர்களும் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் சேர்ப்பதற்கு இந்த சிறப்பு முகாம்களில் விண்ணப்பங்களை வழங்கலாம்.தேர்தலில் மாணவர்களின் பங்கு மிக முக்கியமானது. எனவேதான் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் ஒரு தூதுவர் நியமிக்கப்பட்டு , அந்த தூதுவர் மூலம் வாக்களிப்பதின் அவசியம், வாக்குரிமையின் முக்கியதுவம் குறித்து எடுத்துரைக்கப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் நியமிக்கப்பட்ட நோடல் அலுவலரிடம் 18 வயது பூர்த்தி அடைந்த அனைத்து மாணவ, மாணவிகளும் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை மொத்தமாக வழங்கி பெயர்களை சேர்க்கலாம். விண்ணப்பங்களை நிரப்பும்போது கவனத்துடன் அனைத்து கலங்களையும் நிரப்ப வேண்டும்.

இதுமட்டுமல்லாமல் **www.elections.tn.gov.in** என்ற இணையதளத்தில் வாயிலாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/நீக்க/ திருத்தம் செய்து கொள்ளலாம். இணையதளத்தில் பதிவு செய்தவர்களுக்கும் மற்றும் இதர இடங்களில் விண்ணப்பங்களை அளித்தவர்களுக்கும் ஒப்புகை எண் ஒன்று தரப்படும். அந்த எண்ணின் மூலம் உங்களது விண்ணப்பத்தின் நிலையை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

எனவே 18 வயது பூர்த்தி அடைந்த தகுதியான அனைவரும் வாக்களித்தால் தான் வலுவான ஜனநாயகத்தை உருவாக்க முடியும் என்பதால், அனைவரும் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் பெயர் இருப்பதை உறுதி செய்து ஜனநாயக கடமையை ஆற்ற வேண்டும் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் சிவகாசி வட்டாட்சியர் திரு.பாஸ்கரன், வட்டாட்சியர்(தேர்தல்) திரு.ஸ்ரீதர், கல்லூரி முதல்வர் திரு.பாண்டியராஜன், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

**முன்னதாக மாவட்ட ஆட்சியரின் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் விழிப்புணர்வு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

விருதுநகர் மாவடட்ட ஆட்சியரின் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் விழிப்புணர்வு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு இந்திய குடிமகனும் வாக்குரிமையின் முக்கியதுவத்தை தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காக தான் இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் ஸ்வீப் (SVEEP - Systematic Voters' Education and Electoral Participation) ஏற்படுத்தப்பட்டு பொதுமக்களிடையே நேரடியாக விளக்கக்கூட்டம் நடத்துதல், விழிப்புணர்வு பேரணி, துண்டுப்பிரசுரம் வழங்குதல், கையெழுத்து இயக்கம் நடத்துதல், உறுதி மொழி எடுத்தல் போன்ற நிகழ்வுகள் மூலமாகவும், தொலைக்காட்சிகள் வாயிலாகவும், சமூக வலைதளங்கள் வாயிலாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

18 வயது நிரம்பிய வாக்காளர்களிடையே தங்களை வாக்காளர்களாக பதிவு செய்வதன் அவசியம் குறித்தும், வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்தும், வாக்குரிமையை பயன்படுத்துவதற்கான வழிமுறையை வாக்காளர்களிடையே எடுத்துரைப்பதற்காகவும், மேலும் பொதுமக்களிடையே வாக்காளர் பட்டியலில் குறிப்பாக தங்களது பெயர் இரு இடங்களில் இடம் பெற்றிருந்தால் தாமாக முன்வந்து நீக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், வாக்காளர் பட்டியலில் மிக எளிமையாக தங்களது பெயரை சேர்கக/நீக்க/மாற்றம் செய்ய முடியும் என்பதை பற்றியும் பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்த தேர்தல் விழிப்புணர்வுக்குழு கூட்டம் கூட்டப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள லயன்ஸ் கிளப் மற்றும் ரோட்டரி கிளப் நிர்வாகிகள், தங்களது பகுதிகளில் வசிக்கும் மக்கள் எளிமையாக புரிந்துகொள்ளும் விதமாக துண்டு பிரசுரங்கள் விநியோகித்தல், கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்தி ஜனநாயக கடமை ஆற்ற வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைக்க வேண்டும். மேலும் விருதநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரியில் உள்ள என்.எஸ்.எஸ் ஒருங்கிணைப்பாளர்கள் தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் அனைவரின் பெயரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்திட வேண்டுமென கேட்டுக்கொண்டார். இந்த வாக்காளர் விழிப்புணர்வு குழுக்கூட்டத்தில் பங்கேற்றுள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் வாக்களிப்பதின் அவசியம் குறித்து என்னென்ன முறையில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கலாம் என பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

மேலும் மாவட்டத்தில் உள்ள 18 வயது நிரம்பிய தகுதியுடைய அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை சேர்த்து ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)திரு.பூமி, சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கிருஷ்ணம்மாள், லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் நிர்வாகிகள், கல்லூரிகளின் என்.எஸ்.எஸ் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்**